வருடாந்த அறிக்கை

2011

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகம்

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம்

யக்கல

வருடாந்த அறிக்கை

2011

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

களனிப் பல்கலைக்கழகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1995 மார்ச் 13ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 862.'.8 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலூடாக 1978 இல.16 பல்கலைக்கழக சட்டத்தின் 24 அ(2) மற்றும் 24(ஆ) வின் கீழ் 1995 இல 01 என்ற கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடத்தை நிறுவுவதைப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.அதனூடாக கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்விப்பீடத்தை களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயர் கல்விப்பீடமாக நிறுவப்பட்டுள்ளது.

அந்த பிரகடனத்தில் ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை ஆகிய 5வருட பட்டப்பாடனெரிகளை நடாத்துவது முக்கியமான நோக்கமாக உள்ளது.

அதற்கமைய 1995 மார்ச் 01ம் திகதி முதல் உயர் கல்விப்பீடமாக நடாத்திச்செல்லும் இந்த நிருவகத்தின் 2011ம் ஆண்டுக்கான நிருவக நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி உள்ளடங்கிய அறிக்கை,இறுதி கணக்கறிக்கை மற்றும் 2011 ஆண்டுக்காக இந்த நிருவகம் சம்பந்தமான அரச கணக்காய்வாளரால் தரப்பட்ட அறிக்கையையும் இத்துடன் முன்வைக்கின்றேன்.

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே

பணிப்பாளர்

கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத
கல்வி நிறுவகம்
பணிப்பாளரின் அறிக்கை

நிறுவகத்தின் நோக்கு மற்றும் செயற்பணிகள் போன்ற இலக்குகளை அடைவதற்காக தயாரிக்கப்பட்ட 2010 தொடக்கம் 2015 வரையிலான இணைந்த திட்டத்தை இந்த நிறுவகத்தில் 2010.06.28 ஆம் திகதி நடைபெற்ற 174 ஆவது முகாமைத்துவ சபையின் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது..

அதற்கமையஇ பட்டப்படிப்பு மாணவர்களினதும் கல்விசார் பதவியினர்களினதும் வினைத்திறமைகள் மெச்சும் அளவுக்கு இலக்குகளை அடைவதற்கு இயலுமாகியுள்ளதென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எவ்வாறாயினும் இணைந்த திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை எட்டுவதற்கு தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகளினால் குறித்த இலக்கை அடைய முடியாது போயுள்ளது எனவும் குறிப்பிடல் வேண்டும்.

ஆகவே உட்கட்டமைப்பு வசதிகள்இ அபிவிருத்தி உள்ளடக்கிய இணைந்த திட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் இணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை இயலுமானளவு எட்ட முடியுமென நான் நம்புகின்றேன்.

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே.
பணிப்பாளர்.

உள்ளடக்கம்

விடயம்		பக்க இலக்கம்
01.	நிறுவகத்தின் நோக்கு	01
02.	செயற்பணி	02
03.	பணிப்பாளரின் செய்தி	03
04.	வளங்கள் மற்றும் மாணவர் பற்றிய தகவல்	04
05.	தேசிய மாணவர்கள் பற்றிய தகவல்	04
06.	வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய தகவல்	04
07.	கல்விசார் பணியாளர் சபையின் தகவல்	05 - 06
08.	கல்விசாரா பணியாளர் சபையின் தகவல்	06
09.	ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரம்	07
10.	நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம்	07
11.	பெற்ற விருதுகள் பற்றிய விபரம்	08
12.	ஆரம்பித்த புதிய பாடநெறி பற்றிய தகவல்	08
13.	மீள்வரல் செலவு விபரங்கள்	09
14.	மூலதன செலவு பற்றிய விபரங்கள்	09
15.	செயற் திட்டங்கள் பற்றிய விபரம் (தேசிய.'.வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு)	09
16.	திட்டங்களுக்கான செலவுகளைப் பற்றிய விபரம் (உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு)	10
17.	நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவு)	10
18.	நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (உள்ளக வருவாய்)	10
19.	நிதிச் செயற்பாடு பகுப்பாய்வு - 2011	11
20.	உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2011இல் கிடைத்தவை	11
21.	வேறு விபரங்கள்	
	21.1 நூலகம் .	11
	21.2 கணினிப் பிரிவு	11
	21.3 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல்	12
22.	பணிப்பாளரின் அறிக்கை	13 - 14
23.	2011.12.31 க்கு நிதி நிலைமை பற்றிய அறிக்கை	15
24.	2011.12.31 உடன் முடிவடையும் வருடத்துக்கான வரவு செலவு பற்றிய அறிக்கை	16
25.	கணக்காய்வாளர் அறிக்கை	17 - 23
26.	கணக்காய்வாளர் அறிக்கைக்கான விடைகள்	24 - 27

1.**நிறுவகத்தின் நோக்கு**

நோக்கு

ஆற்றல் நிறைந்த பட்டதாரிகளை உருவாக்குவதினூடாக ஆயுர்வேத கல்வி பற்றிய தலைசிறந்த மத்திய நிலையமாகுதல்.

2.செயற்பணி

செயற்பணி

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகத்தின் செயற்பணியாவது, ஆயுர்வேத வைத்தியத் துறையில் விஞ்ஞான ரீதியான அறிவை மற்றும் புரிந்துணர்வை வளர்த்தலும் மற்றும் அறிவைப் பரப்புதலுக்காக கீழ்வரும் நோக்கங்களையும் மற்றும் செயன்முறைகளையும் செயற்படுத்துவதுமாகும்.

“இந்த நிறுவகத்தில் கல்வி கற்கும் மாணவர்களை அனைத்து விதத்திலும் விருத்தி செய்வதற்காக தகுந்த சூழலை உருவாக்குதல், ஆயுர்வேத வைத்தியக் கல்வியில் செயன்முறை மற்றும் ஆராய்ச்சிகளை முன்னேற்றுவதற்காக தகுந்த சூழலை கட்டியெழுப்புதல், இலங்கையில் சுகாதாரத் துறைக்கு ஏற்ற நவீன கற்கை மற்றும் பயிற்சிகள் ஊடாக அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக செயன்முறைப் பயிற்சிகளுக்கு அடிப்படையான சூழலைக் கட்டியெழுப்புதல், தற்போதுள்ள ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் பட்டப் பாடநெறியின் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தி மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக திட்டம் வகுத்தல், இலங்கையில் மற்றும் நாட்டுக்கு அப்பால் சுகாதார துறையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல், தேவையான தகுதிகள் மற்றும் ஆற்றல் கொண்ட மனிதவளக் குழுவொன்றை நிறுவகத்துக்குள் உருவாக்குதல்.”

3.**பணிப்பாளரின் செய்தி**

அ. **அறிமுகம்**

நிறுவகத்தின் நோக்கு மற்றும் செயற்பணியை அடைவதற்காக வகுக்கப்பட்ட 2011 – 2015 வரையிலான உடன்பாட்டுத் திட்டத்தை, இந்த நிறுவகத்தில் 2011-07-22 ஆம் திகதி நடைபெற்ற 185ஆவது முகாமைத்துவ சபை அங்கீகரித்துள்ளது.

ஆ. **சாதனைகள்**

பட்டப் படிப்பு மாணவர்களின் மற்றும் கல்விசார் பணியாளர் சபையின் செயலாற்றுகையை வரவேற்கக்கூடிய அளவுக்கு அடைய முடிந்தமையை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

இ. **குறைபாடுகள்**

உடன்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதில் தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் எதிர்பாராத தடைகள் காரணமாக சில இலக்குகளை அடைய முடியவில்லை என்பதைக் கூற வேண்டும்.

ஈ. **எதிர்காலத் திட்டங்கள்**

உடன்பாட்டுத் திட்டம் திருத்தப்பட்டதோடு, அதனூடாக உடன்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளில் ஓரளவை எதிர்வரும் வருடத்திற்குள் அடைய முடியும் என்பது என் நம்பிக்கையாகும்.

பாடவிதானத்தைத் திருத்தும் பணிகளை முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் செயற்படுத்தியதோடு 2010⁄2011 கல்வியாண்டில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக புதிய பாடத்திட்டத்திற்கமைய போதனைகளை ஆரம்பிக்க முடிந்தது.

நிருவாகத்திற்குக் குறைபாடாக இருந்த மின்பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்திருப்பதோடு 2012ஆம் ஆண்டில் புதிய மின் பிறப்பாக்கியைப் பொருத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிறுவனத்திற்கு உள்ள நில வசதி போதாமையால் நிறுவனத்தைச் சூழவுள்ள கைவிடப்பட்ட காணிகளை சுவீகரிக்க விடுத்த வேண்டுகோளுக்கான வேலைகளை, அதை நிறைவேற்றிக்கொள்ளும் வரை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கின்றேன்.

4.வளங்கள் மற்றும் மாணவர் பற்றிய தகவல்

நிறுவனம்	பாடநெறி	மொத்த மாணவர் எண்ணிக்கை	மொத்த கல்விசார் பணியாளர் சபை	மொத்த கல்விசாரா பணியாளர் சபை
கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்	ஆயுர்வேத மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் பட்டம டீ.யு.ஆ.ளு	371	30	104
மொத்த எண்ணிக்கை		371	30	104

5.தேசிய மாணவர்கள் பற்றிய தகவல்

நிறுவகம்	பாடநெறி	மொழிமூலம்	சேர்த்துக் கொள்ளல் 2011	முதலாம் ஆண்டு மாணவர்	2ஆம் ஆண்டு மாணவர	3ஆம் ஆண்டு மாணவர	4ஆம் ஆண்டு மாணவர்	5ஆம் ஆண்டு மாணவர்	பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை
கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகம்	டீ.யு. ஆ. ளு.	சிங்களம்		96	99				59
		ஆங்கிலம்				87	51	38	
மொத்தம்				96	99	87	51	38	59

6.வெளிநாட்டு மாணவர் பற்றிய தகவல்

நிறுவகம்	பாடநெறி	மொழிமூலம	சேர்த்துக் கொள்ளல	முதலாம் ஆண்டு மாணவர	2ஆம் ஆண்டு மாணவரய	3ஆம் ஆண்டு மாணவர	4ஆம் ஆண்டு மாணவர	பட்டம் பெற்ற மொத்த எண்ணிக்கை
மொத்தம்								

7. கல்விசார் பணியாளர் சபையின் தகவல்

நிருவாகம்	பாடம்	மொழி மூலம்	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்	விரிவுரையாளர்	உதவி விரிவுரையாளர்	ஆலோசகர்
சல்ய சாலக்ய	சல்ய	சிங்களம் ஆங்கிலம்	-	-	01	-	-	-
	சாலக்ய	சிங்களம்	-	-	01	-	-	-
சிறுவர் மற்றும் பெண் நோய்	பெண் நோய்	சிங்களம்	-	-		-	01	
	சிறுவர் நோய்	சிங்களம்			02			02
	பிரசூத தந்திர	சிங்களம்						
திரவ்யகுண விஞ்ஞான	திரவ்யகுண விஞ்ஞான	சிங்களம் ஆங்கிலம	-	01	04	-	-	
	ரச சாஸ்திர	சிங்களம் ஆங்கிலம்	-	-	02	-	-	03 காட்சியாளர்
	பைஷஜ்ய கல்பனா	சிங்களம் ஆங்கிலம்	-	-	02	-	-	
ஆயுர்வேத சித்தாந்தம்	ஹிந்தி ஆங்கிலம் சமஸ்கிருதம்	ஆங்கிலம் சிங்களம்	- - -	- - -	- - 01	-	01 வெளிவாரி 02 வெளிவாரி 01 பயிலுனர்	
	பதார்த்த விஞ்ஞானம்	ஆங்கிலம் சிங்களம்	-	-	-	02		
	ஆயர்வேத வரலாறு	ஆங்கிலம் சிங்களம்				01		
	வுர்தத்திரிய	ஆங்கிலம் சிங்களம				02		
	உடற்செயல் நவ்ய	ஆங்கிலம் சிங்களம					01 பயிலுனர்	
	சரிர ரச்சனா நவ்ய	ஆங்கிலம் சிங்களம					01 வெளிவாரி 01 பயிலுனர்	04 காட்சியாளர்
	சரிர ரச்சனா ஆயர்வேத	ஆங்கிலம் சிங்களம				01		

	உடற்செயல் ஆயுர்வேத					01		
	தோசதாது மள விஞ்ஞான					02		
	ஜோதிட சித்தாந்தம்						01 பயிலுனர்	
	பூத விஞ்ஞானம்						01 பயிலுனர்	
சிகிச்சை	ரோக விஞ்ஞான							
	உடற்சிகிச்சை ச							
	தேசிய சிகிச்சை							
	அகத தந்திர							
	ஸ்வஸ்தவுத் திர							
	வியாதிவேதி							
	வோகாரிக்க மருத்துவ விஞ்ஞான மற்றும் தூலக்க வேதய							
	ஆராய்ச்சி முறைமை							
மொத்தம்				01	13	09	10	09

08.**கல்விசாரா பணியாளர் சபையின் தகவல்**

நிருவகம்∴பிரிவு	நிர்வாகப் பணியாளர் சபை	சிரேஷ்ட பதவிசார் உத்தியோகத்தர்	பதவிசார் உத்தியோகத்தர்	கனிஷ்ட	சிற்றூழியர்
சிகிச்சை	-	02	02	-	02
சல்ய சாலக்ய	-	01	01	-	01
சிறுவர் மற்றும் பெண் நோய்	-	-	02	-	01
திரவ்ய குண விஞ்ஞான	-	-	03	01	02
சித்தாந்தழ்மருத்துவ விஞ்ஞானத் தொழினுட்பப் பிரிவு	01ழூ	01	03	03	01
நிர்வாகம்	02	02	11	07	03
பராமரிப்பு	-	01	01	04	07
பரீட்சை	01	04	04	01	01
கணக்கு	02	03	08	-	02
நூலகம்	-	-	03	03	01
கணினி	-	02	01	-	01
மொத்தம்	06	16	39	19	22

ழூ சிரேஷ்ட தொழினுட்ப அதிகாரி

09.**ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரம்**

விடயம்	குறித்த தொகை	நிதி ஈட்டுதல்	சமர்ப்பித்தல்
அ. ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை	சல்ய சாலக்ய 04 திரவ்யகுண விஞ்ஞான	- 01	01 02
ஆ. புதிய கண்டுபிடிப்பு	-	-	-
இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை	-	-	-
ஈ. புத்தகங்களின் எண்ணிக்கை	-	-	-
உ. கட்டுரைகளின் எண்ணிக்கை	திரவ்யகுண விஞ்ஞான பெண்நோய் 05	-	02
ஊ. வேறு			
மொத்தம்		01	05

10. **நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம்**

விடயம்	பங்குபற்றிய	பூர்த்திசெய்த	சமர்ப்பித்த
அ. பட்டப்பின் படிப்பு • சல்ய சாலக்ய		04	
ஆ. டிப்ளோமா பின் படிப்பு			
இ. பட்டப்படிப்பு			
ஈ. டிப்ளோமா			
உ. சான்றிதழ் பாடநெறி • திரவ்யகுண விஞ்ஞான	03		
ஊ. வேறு • பெண்நோய • திரவ்ய குண	01 01		
மொத்தம்	05	04	

11. **பெற்ற விருதுகள் பற்றிய விபரம்**

	பாடம்	விருதுகளின் எண்ணிக்கை	கல்விசார் பணியாளர் சபை	மாணவர்களின் எண்ணிக்கை
அ. உள்நாட்டு விருது	சல்ய சாலக்ய திரவ்யகுண விஞ்ஞான	01 03	✓ ✓	
ஆ. தேசிய விருது	பெண்நோய்	01	✓	
இ. சர்வதேச விருது	சல்ய சாலக்ய	01		
ஈ வேறு				
மொத்தம்		06	03	

12. **ஆரம்பித்த புதிய பாடநெறி பற்றிய தகவல்**

கற்கைப் பிரிவு	பாடநெறி	மோழி மூலம்	சான்றிதழ்	டிப்ளோமா	டிப்போமா பின்படிப்பு	பட்டப் பின் படிப்பு	ஆ.ீாடை
சல்ய சாலக்ய	கிஷார சூத்திர	-	✓				
	யோகா			✓			
சிறுவர் மற்றும் பெண்நோய்	ஆயுர்வேத அழகுசாதன	சிங்களம்	✓				
	ஸ்கேனிங் பாடநெறி	சிங்களம்	✓				
திரவ்யகுண விஞ்ஞான	ஆயுர்வேத பாமஸி	சிங்களம்					
புட்டப் பின் படிப்புப் பிறிவு	ஆயுர்வேத வைத்தியசாலை முகாமைத்துவ பட்டப் பின் டிப்லோமா						
மொத்தம்			03	01			

13.**மீள்வரல் செலவு விபரங்கள்**

விடயம்	2010	2011
அ. ஊழியர் சம்பளம்	69,320,645	95,133,199
ஆ. பிரயாணச் செலவு	214,634	189,848
இ. வழங்கல்	4,242,138	5,527,468
ஈ. பராமரிப்பு	3,961,463	2,957,349
உ. கணக்கிட்ட சேவை	12,438,411	16,590,316
ஊ. வேறு	3,930,162	4,928,760
மொத்தம்		

14.**மூலதன செலவு பற்றிய விபரங்கள்**

விடயம்	2010	2011
மூலதன சொத்துக்களை விருத்தி செய்தல்	1,976,020	2,670,505
சொத்துக்களை கொள்வனவு செய்தல்	2,553,656	7,379,375
கட்டுமானம்	32,742,461	92,979,290
மொத்தம்		

15.**செயற் திட்டங்கள் பற்றிய விபரம் (தேசிய.்.வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு)**

பெயர் மற்றும் விபரம்		கடன்.்.உதவி	உதவி வழங்கும் நிறுவனம்	மொத்தச் செலவு	பேற்ற நிதி	வித்தியாசம
வைத்தியர் திரு.பந்துல வீரசூரிய	2006	753,000.00	யேவமைியெட ஊநவெசந கழச யுனஎயஉெநன ளுவரனநைள	753,000.00	753,000.00	-
	2008	753,000.00		753,000.00	753,000.00	-
	2009	700,000.00		699,992.24	700,000.00	7.76
வைத்தியர் திரு.று.யு.டு.சந்திரசிறி	2006	687,150.00	யேவமைியெட ஊநவெசந கழச யுனஎயஉெநன ளுவரனநைள	687,150.00	687,150.00	-
	2008	687,150.00		687,150.00	687,150.00	-
	2009	687,150.00		528,351.28	687,150.00	158,798.72

வைத்தியர் திரு.ளு.ஆ.ளு.சமரகோன	2009 2010	287,470.79	ஊேயுளு	219,747.79	275,000.00 12,470.79	55,252.21 12,470.79
திரு.மு.ஆ.சந்திமால்	2010 2011	750,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	250,000.00 1,794.05	250,000.00 250,000.00	 248,205.95
வைத்தியர் திரு.திஸ்ஸ ஹேவாவிதான	2008 2010 2011	250,000.00 250,000.00 124,800.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	250,000.00 194,655.00	250,000.00 250,000.00 124,800.00	 194,655.00
வைத்தியர் திருமதி.ர்.ளு.சகுந்தலா	2009	250,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	225,295.04	250,000.00	24,704.96
வைத்தியர் செல்வி.ரூபா மதநாயக்க	2009	250,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	221,918.91	250,000.00	28,081.09
வைத்தியர் திரு.யு.யு.து.புஷ்பகுமார	2010	500,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	268,392.62	250,000.00	(18,392.62)
வைத்தியர் திருமதி.து.ர்.ீ.சு.மு.ஜயசிங்க	2010	500,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	139,577.58	250,000.00	110,422.42
வைத்தியர் செல்வி.து.யு.னு.ீ.ஜயகொடி	2010	500,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	310,157.14	250,000.00	(60,157.14)
வைத்தியர் திருமதி.ர்.ீ.வக்கும்புர	2010	500,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	250,193.15	250,000.00	(193.15)
திரு.ளு.யு.சு.யு.திஸாநாயக்க	2010	55,000.00	ரு.பு.ஊ. சுநளநயசஉா குரனெ	12,000.00	55,000.00	43,000.00

16.திட்டங்களுக்கான செலவுகளைப் பற்றிய விபரம் (உள்நாட்டு வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு

பெயர்	மொத்த செலவு	செலவு **2010**	செலவு **2011**	**2011.12.31** இக்கு மொத்த செலவு	முன்னேற்றம் **டூஸரூ**
வைத்தியர் திரு.பந்துல வீரசூரிய	1,830,054.74	331,037.50	44,900.00	2,205,992.24	100
வைத்தியர் திரு.று.யு.டு.சந்திரசிறி	1,738,951.28	163,700.00	-	1,902,651.28	92
வைத்தியர் திரு.ளு.ஆ.ளு.சமரகோன்	103,348.84	116,398.95	-	219.747.79	76
திரு.மு.ஆ.சந்திமால்	-	66,116.85	185,677.20	251,794.05	100
வைத்தியர் திரு.திஸ்ஸ ஹேவாவிதான	77,246.00	146,345.00	158,549.00	382,140.00	100
வைத்தியர் திருமதி.ர்.ளு.சகுந்தலா	105,759.00	108,090.90	11,445.14	225,295.04	90
வைத்தியர் செல்வி.ரூபா மதநாயக்க	122,352.00	77,904.00	21,662.91	221,918.91	89
வைத்தியர் திரு.யு.யு.து.புஷ்பகுமார	-	42,117.27	226,275.35	268,392.62	100
வைத்தியர் திருமதி.து.ர்ீ.சு.மு.ஜயசிங்க	-	44,055.38	95,522.20	139,577.58	56
வைத்தியர் செல்வி.து.யு.னுீ.ஜயகொடி	-	14,500.00	295,657.14	310,157.14	124
வைத்தியர்திருமதி.ர்ீ.வக்கும்புர	-	41,868.25	208,324.90	250,193.15	100
திரு.ளு.யு.சு.யு.திஸாநாயக்க	-	12,000.00	-	12,000.00	22
மொத்தம்					

17.நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவு)

விடயம்	ஒதுக்கீடு **2011**	செலவு **2011**	எஞ்சியது.ஃமேலதிக (அளவு மீறிய)
அ. மீள்வரல்	111,099,198	130,182,576	
ஆ. மூலதன	137,300,000	103,029,171	
இ. திட்டங்கள்- உள்நாட்டு உதவி			
ஈ. திட்டங்கள்- வெளிநாட்டு உதவி			
மொத்தம்	**248,399,198**	**233,211,747**	

18.நிதி நிலைமையின் முன்னேற்றம் பற்றிய விபரம் (உள்ளக வருவாய்)

வருமானம் ஈட்டும் வழி	ஒதுக்கீடு மதிப்பீடு	வரவு **2011**	குறை.ஃ.அதிகம்
அ. பட்டதாரி மாணவர்	2,600,000	4,692,934	
ஆ. பட்டப் பின் படிப்பு			
இ. ஆலோசகர்			
ஈ. வேறு.ஃ.பாடநெறி நிதிமூலம்	4,800,000	4,855,636	
மொத்தம்	**7,400,000**	**9,548,570**	

19. நிதிச் செயற்பாடு பகுப்பாய்வு - 2011 :

விடயம்	குறியீடு	தனிமாணவர் செலவு
அ. தனிமாணவர் செலவு மீள்வரல் செலவு மீ.செ.ஃ.மாணவர் எண்ணிக்கை		337,808
ஆ. தனி மாணவர் செலவு முதலீட்டு செலவு மீ.செ.ஃ.மாணவர் எண்ணிக்கை		277,706
மொத்தம்		**615,514**

20.உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2011இல் கிடைத்தவை

உட்கட்டமைப்பு பற்றிய விபரம்	செலவு	முன்னேற்றம்
மூலதன சொத்துக்களை மேலும் மேம்படுத்தல்	2,670,505.82	55ஸ
கட்டுமானம்	92,979,290.32	79ஸ

21.வேறு விபரங்கள்(அறிக்கைக்கு அமைய):

21.1 **நூலகம்**

2011ம் ஆண்டில் நூல்கள் பெற்றுகொண்டதின் சாராம்சம்

விவரம்	**கொள்வனவு செய்தல்**	**அன்பளிப்பு**	**மொத்தம்**
நூல்கள்	367	08	375
வார வெளியீடுகள்	07	-	07
பத்திரிகைகள்	15	-	15

21.2 **கணினிப் பிரிவு**

கணினிப் பிரிவின் நடவடிக்கைகளை இவ்வாண்டிலும் வெற்றிகரமாக நடாத்திச்செல்ல முடிந்ததோடு போதிய அளவு சேவையை மாணவர்களுக்கும் பணியாளர் சபையினருக்கும் வழங்க முடிந்தது.

21.3 **உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

- புதிய வேன் ஒன்றை வாகனங்களின் எண்ணிக்கையுடன் சேர்க்க முடிந்தது.
- கட்டப்பட்டுக்கொண்டிருந்த மாணவர் மத்திய நிலைய கட்டிடத்திலும் நூலகக் கட்டிடத்திலும் வேலைகள் 2011 நவம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டதோடு நூலகத்தை அதில் ஸ்தாபிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் மத்திய நிலைய கட்டிடத்தில் குறித்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- ஏற்கனவே இருந்த பழைய சிற்றுண்டிச்சாலை புதிய மாணவர் மத்திய நிலையக் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளரின் அறிக்கை

1978 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் உள்ள விதிமுறைகளுக்கமைய களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்கிரமாரச்சி கல்வி நிர்வாகத்தின் 2011ஆம் ஆண்டுக்கான நிதி நடவடிக்கை பற்றிய அறிக்கை

2011ஆம் ஆண்டுக்காக நிர்வாகத்திற்கு திறைசேரியால் கிடைத்த நிதி உதவிகள் கீழ்வருமாறு

<u>மீள்வரல் உதவி</u>

அரச மதிப்பீடு மூலமாகப் பெற்ற உதவி	-	111“09
நிர்வாகத்தால் ஈட்டும் மீள்வரல் வருமானம்	-	9“54
	-	120“63

<u>சேர்க்கப்பட்டது.</u>

முறை தேய்மானம்	-	15“14
மொத்தம்(மீண்டுவரும்)	-	135“78

<u>மூலதன உதவி</u>

செலவுத் தலைப்பு 101 புனருத்தாரன மற்றும் பராமரிப்புக்காக	-	4“90
செலவுத் தலைப்பு 102 உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள், - மற்றும் சஞ்சிகைகள் பெறல்	-	14“70
செலவுத் தலைப்பு 103 கட்டிடங்கள் அமைத்தல்	-	117“70
மொத்தம்(மூலதன)		137“30

வருமானம்

2011ஆம் கணக்காண்டுக்குள் மீண்டுவரும் வருமானமாக அரசினால் கிடைத்த தொகை ரூபா 111"099"108 ஆவதோடு கல்வி நிறுவகத்தால் ஏனைய மீண்டுவரும் வருமான வழிகளால் பெற்ற தொகை ரூபா 9"548"570 உம் முறை தேய்மான திருத்த நடவடிக்கைகளோடு ரூபா 15"132"899 உம் உட்பட மொத்த வருமானம் ரூபா 135"780"577 ஆகும்.

செலவு

2011ஆம் வருடத்துக்காக மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 145"315"475 ஆகும். இதற்கமைய வருடத்தின் வருமானத்தை விட மேலதிகமாகச் செய்த செலவு ரூபா 9"534"898 ஆகும்.

நிலையான சொத்துக்களை தேய்மானம் செய்தல்

நிறுவகத்தின் நிலையான சொத்துக்களை தேய்மானம் செய்வதற்காக 2011ஆம் ஆண்டுக்குள் 15"132"899 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

வருடத்தில் மூலதன ஒதுக்கீடு பிரதிபலன்

செலவுத் தலைப்பு 101 – பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு

2011ஆம் ஆண்டுக்காக 101 திட்டத்தின் கீழ் 4,900,000 ரூபா நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்டதோடு, வருடத்தின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு செலவுகளாக 2,670,505 ரூபா செலவு செய்யபட்டுள்ளது.

செலவுத் தலைப்பு 102 – அலுவலக உபகரணங்கள், கல்வி உபகரணங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள்

கொள்வனவு செய்தல்

2011ஆம் ஆண்டுக்காக 14,700,000 ரூபா இந்தத் திட்டத்தின் கீழ் நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்டதோடு, அவற்றைக கொள்வனவு செய்ய 7,379,375 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

செலவுத் தலைப்பு 103 – கட்டுமானப் பணிகள்

2011 ஆம் ஆண்டுக்காக இந்தத் திட்டத்தின் கீழ் 117"700"000கூ- ரூபா நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்டதோடு, குறித்த கட்டுமானப் பணிகளுக்காக 92"979"290 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே

பணிப்பாளர்

2011-12-31 திகதிக்கு நிதி நிலமையை காட்டும் அறிக்கை

	2011		2010	
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
சொத்துக்கள்				
நடைமுறையற்ற பொறுப்புகள்				
(அ) கானிகள்	72,076,250		4,277,790	
(ஆ) கட்டடங்கள்	94,597,077		52,176,891	
(இ) அலுவலக உபகரணங்கள்	17,480,430		8,890,518	
(ஈ)இரசாயனகூட உபகரணங்கள்	18,479,240		2,328,077	
(உ)தளபாடங்கள் மற்றும் இணைப்புகள்	11,889,987		2,882,946	
(ஊ)நூலக நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்	8,173,590		2,167,215	
(எ) மோட்டார் வாகனங்கள்	9,254,799		1,630,547	
(ஏ)இயந்திர உபகரணங்கள்	1,495,026	233,446,399	1,089	74,355,073
(ஐ)வேறு		1,614,356		1,866,855
(ஒ)முடியாத வேலைகள்		102,426,246		9,446,956
(ஓ)மூலதன முற்கொடுப்பனவு		8,994,661		24,537,845
முதலீடு				
நிலையான வைப்புகள்		21,929,511		9,721,231
		368,411,173		**119,927,960**
நடைமுறைச் சொத்துக்கள்				
(அ)கலஞ்சிய முற்கொடுப்பனவு	1,765,401		2,333,509	
(ஆ)கடனாளிகள்	1,497,840		1,139,840	
(இ)கடன் மற்றும் முற்கொடுப்பனவு	19,715,790		19,091,896	
(ஈ)கலப்பு முற்கொடுப்பனவு	173,529		-	
(உ)ஆராய்ச்சி முற்கொடுப்பனவு	41,500		53,500	
(ஊ)முற் செலுத்தல்	164,560		37,063	
(எ)வங்கி மிகுதி	73,197,699		29,277,564	
(ஏ)வங்கி மிகுதி (வெளிவாரிப் பாடநெறி)	275இ770			
(ஐ)சிறு பண மிகுதி	180		180	
(ஒ)வேறு சொத்துக்கள்	1,637,710	98,469,979	750,597	52,684,149
மொத்தச் சொத்துக்கள்		466,881,152		172,612,109
பொறுப்புகள்				
(அ)நடைமுறை பொறுப்புகள்	282,750		441,450	
(ஆ)பணம் செலுத்தல்				
	17,114,279		6,538,398	

இ. திட்டமிட்ட செலவு	2,548,782	19,945,811	2,944,616	9,924,464
<u>நடைமுறையற்ற பொறுப்புகள்</u>				
அ. மிகையூதியத்திற்காக ஒதுக்கீடு		33,751,935		25,778,315
மொத்தப்பொறுப்பு		53,697,746		35,702,779
மொத்த தூய சொத்துக்கள்.ஃ.உரிமைகள்		413,183,406		136,909,330
அ. செலவு செய்த மூலதனம்	215,099,344		127,203,071	
ஆ. செலவு செய்யாத மூலதனம்	42,898,001		8,627,173	
இ. நிதியம்	(14,356,181)		(4,330,026)	
ஈ. விசேட விடயங்களுக்கான உதவி	169,542,242		5,409,112	
முழுத் தூய சொத்துக்கள்		413,183,406		136,909,330

பேராசிரியர் ஜனிதா ஏ லியனகே

பணிப்பாளர்

பிரதி நிதிப் பொறுப்பாளர்

று.யு.னு.ளு.மொலகொட

2011.12.31 உடன் முடியும் ஆண்டுக்கான
வரவு செலவு பற்றிய அறிக்கை

	2011 ருபா	ருபா	2010 ருபா	ருபா
செயற்பாட்டு வருமானம்				
மீள்வரல் உதவி		111,099,108		89,525,000
தேய்மானம்		15,132,899		9,583,323
வேறு வருமானம்				
டு1ரூ கடன் மற்றும் முற்கொடுப்பனவு வட்டி	759,447		809,686	
டு2ரூ பல்வேறு பெறல்	2,530,119		1,454,157	
டு3ரூ வட்டி வருமானம்	880,624		268,265	
டு4ரூ மாணவர் பதிவுக் கட்டணம்	111,875		147,060	
டு5ரூ பரீட்சைக் கட்டணம்	4,050		5,400	
டு6ரூ நூலக தண்டப்பணம்	69,904		42,890	
டு7ரூ வைத்திய கட்டணம்	18,060		18,530	
டு8ரூ சொத்துக்களில் பெற்ற கூலி	318,855		190,965	
டு9ரூ வெளியீடு விற்பனை	-		-	
டு10ரூ பழைய பொருள் விற்பனை (வாகனங்கள்)	-		-	
டு11ரூ இணைப்புச் செயற்பாடுகள்	-		-	
டு12ரூ வெளிவாரி பாடநெறி வருமானம்	4,855,636		3,688,881	
		9,548,570		6,625,834
		135,780,577		**105,734,157**
செயற்பாட்டுச் செலவு				
நபர்களுக்கான சம்பளம்	95,133,199		69,320,645	
போக்குவரத்துச் செலவு	189,848		214,634	
வழங்கல்	5,527,468		4,242,138	
பராமரிப்பு	2,957,349		3,961,463	
ஓப்பந்தச் சேவைகள்	16,590,316		12,438,411	
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி				

	263,132		318,670	
தேய்மானம்	15,132,899		9,583,323	
வேறு செயற்பாட்டுச் செலவு	4,665,628		3,611,492	
பாடநெறி செலவு	4,855,636		3,688,881	
மொத்த செயற்பாட்டுச் செலவு		**145,315,475**		**107,379,657**
செயற்பாட்டு நடவடிக்கையால் ஏற்பட்ட மேலதிகம்(குறை)		**(9,534,898)**		**(1,645,500)**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No } சீஈ/எப் /டபிள்யூஏஜ/2011/எப்டி

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date } 2012 ஆகஸ்ட் 23

பணிப்பாளர்
கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்.

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1995 இன் 1 ஆம் இலக்க கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவக கட்டளைச்சட்டததின் 19 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவு மற்றும் 111 ஆம் பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2012 யூன் 15 ஆந் திகதி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளரிற்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය
தொலைபேசி
Telephone } 2887028 -34

ෆැක්ස් අංකය
பக்ஸ் இல
Fax No. } 2887223

ඉලෙක්ට්‍රොනික් තැපැල්
ஈ- மெயில்
E-mail. } oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம் ஒரு வருட சேவைக் காலத்தினைப் பூரணப்படுத்திய பதவியணியினரிற்காக பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் i தொடக்கம் 4 ஆண்டுகள் வரை சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருந்த பதவியணியினருக்காக ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 29 இன் பிரகாரம் முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் காலப்பகுதிக்கான வருமானங்களை சரியாக இணங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வெளிவாரி பாடநெறிகளிற்காக செலவிடப்பட்ட ரூபா 4,855,636 தொகையினை அடிப்படையாகக் கொண்டு வெளிவாரிப் பாடநெறிகளிற்கான வருமானம் என ரூபா 4,855,636 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளிற்கான மொத்தச் செலவினத்தை அந்தப் பாடநெறிகளிற்கிடையே பகிர்வு செய்கையில் மருத்துவமனை பாடநெறிக்கான ரூபா 274,200 கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சிகளிற்காக வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 269,523 ஆனது மூன்று விரிவுரையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆராய்ச்சிகள் முடிவடைந்து இரண்டு ஆண்டுகளிற்கு மேல் கடந்திருந்த போதிலும் செய்யப்பட்ட செலவினங்களை தீர்வுசெய்து கணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது ஐந்தொகையில் உறுதியான நிதியங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2008 ஆம் ஆண்டில் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை ஆயுர்வேத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தினால் அந்த வைத்தியசாலைக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,989,577 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை மீள்நிரப்பப்படாதிருந்தது. மேலும் அத்தொகை மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு

---

i. மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,723,549 பெறுமதியான தளபாட பொருத்திகள் மற்றும் ரூபா 2,184,592 பெறுமதியான இயந்திர உபகரணங்களை உரிய கணக்குகளிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக அலுவலக உபகரணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் இச்சொத்தக்கள் 20% இல் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் சரிவர சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருப்பின் பெறுமானத்தேய்வு விதம் 10% ஆக காணப்பட்டிருக்கும் என்பதனால் ரூபா 490,814 மேலதிகமாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

ii. நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 15,496,590 பெறுமதியான பல்வேறு நிலையான சொத்துக்களை வகைப்படுத்தாது அலுவலக உபகரணங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

iii. நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு தொடர்பாக காட்டப்பட்டுள்ள கணக்குகளிற்கான குறிப்புக்களில் ஆய்வுகூட கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வு வீதம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அலுவலக உபகரணக் கொள்வனவுப் பட்டோலையின் படி மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 6,651,345 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பட்டோலையின் படி கொள்வனவுப் பெறுமதி ரூபா 6,628,764 எனக் காட்டப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 22,581 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்கி ஒழுகாமைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்	
(i) நி.பி 104(2)	நட்ட இழப்புக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூன்ற வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த ரூபா 157,215 நட்டம் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நி.பி 165	06 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 15,612 ஆன 06 காசுக் கட்டளைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை தேறாதிருந்ததுடன் அப்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(iii) நி.பி. 371	பணி நிறைவேற்றியவுடன் பெற்றுக்கொண்ட முற்பணங்களைத் தீர்த்தல் வேண்டுமாயினும் மீளாய்வாண்டில் 33 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 711,463 ஆன சில்லறை முற்பணங்கள் 15 தொடக்கம் 113 நாட்கள் வரை தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.
(ஆ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2011 ஏப்ரல் 18 ஆந் திகதிய PAYE/Tax/01/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை	உழைக்கும் போதே செலுத்தும் வரியினை அறவிட்டு அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 01 தொடக்கம் 09 மாதங்கள் வரை தாமதித்து உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினங்களுக்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 120,634,006 பற்றாக் குறையொன்றானதுடன் அதனோடு நேரொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 91,170,500 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு கிடைத்திருந்த ரூபா. 111,099,108 ஆன அரசாங்க மானியம் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா. 9,534,898 வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 89,525,000 ஆன அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,645,500 வரை குறைவடைந்திருந்தது.

ஆளுக்குரிய வேதனாதிகள், ஒப்பந்தச் சேவைகளிற்கான செலவினம் மற்றும் நிலையான சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு என்பன அதிகரித்தமையே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிறுவகப் பற்றாக்குறை ரூபா 7,889,398 ஆல் அதிகரித்தமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 கல்விசார் செயலாற்றுகை

சேர்த்துக் கொள்ளப்படுகின்ற அனைத்து மாணவர்களும் இறுதிப் பரீட்சைக்கு தோற்றாதுள்ளமை கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான மாணவர் பதிவு மற்றும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைதல் தொடர்பான பின்வரும் பட்டோலையின் படி அவதானிக்கப்படுவதுடன் இந்தக் கல்வியாண்டுகளிற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மாணவர்களில் 6.5% இலிருந்து 23.1% இற்கு இடைப்பட்ட வீச்சிலான மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்கு தோற்றியிருக்கவில்லை.

பதிவு செய்யப்பட்ட கல்வியாண்டு	சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை	இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண்ணிக்கை	பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை
2005/2006	53	47	46
2004/2005	26	22	22
2003/2004	78	60	60
2002/2003	46	43	43
2001/2002	61	56	56

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1996 பேர்ச் கொண்ட 04 காணித்துண்டுகள் நீண்ட காலமாக நிறுவகத்தின் நாளாந்த நடவடிக்கைகளிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் பெயரிற்கு உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட முடியாதுள்ள ரூபா 48,667 பொருள் இருப்பு தொடர்பில் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வரைக்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

2010 ஆம் ஆண்டில் ரூபா 824,000 கிரயத்தில் வெளித்தரப்பினர் ஒருவரால் தயாரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த கணனி முறைமையிலமைந்த நிலையான சொத்துப் பதிவேடு, 2009 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களை உள்ளடக்கி நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள தாமதங்கள்

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் அபிவிருத்திக்காக 2010 ஒக்தோபர் 01 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் ரூபா 03 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அச்செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2010 செப்தம்பர் 28 ஆந் திகதி நிறுவகத்தினால் கம்பியற்ற நேரடி மற்றும் உள்ளக பரிவர்த்தனை முறைமையொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 277,140 செலுத்தப்பட்டிருந்ததுடன் முறைமையிலிருந்து சிறந்த தொடர்பாடலொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், இந்த முறைமையின் உள்ளகத் தொலைபேசி ஒன்றிற்காக மாதத்திற்கு ரூபா 375 வீதம் 50 தொலைபேசிகளிற்காக ஆண்டிற்கு ரூபா 225,000 செலுத்தப்பட்டு வருகிறது.

4.6 நிதிகளின் குறைப் பயன்பாடு

மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் பின்னர் குறைந்தபட்சம் ரூபா 18,600,000 மீதியொன்று பேணிவரப்பட்டிருந்ததுடன் மிகையான பணத்தினை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் ஆளுகையும்

5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களை ஒப்பிடுகையில் 44% இலிருந்து 72% வரையான வீச்சளவில் முரண்பாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது பயனள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நானாவித முற்பணங்கள்

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

ஜீடப்லியுஏஜ ∴ ஏசீ ∴2011கணக்காயவு   சீஈ∴எப்∴டப்லியுஏஜ∴ 2011∴எப்ர   2012.10.02

ர்.யு.ளு.சமரவீர

பதில் கணக்காய்வாளர் நாயகம்,

கணக்காய்வாளர் திணைக்களம்,

இல.306∴72,பொல்தூவ வீதி,

பத்தரமுல்லை.

ஐயா,

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவகத்தின் 2011 டிசம்பர் 31 உடன் முற்றுப் பெறும் ஆண்டுக்கான நிதியறிக்கை சம்பந்தமாக 1978 இலக்கம் 16 என்ற பல்கலைக்கழக சட்டத்தின் 108(2) பந்தி மற்றும் 1971 இல 38 எனும் நிதி சட்டத்திற்கு அமைவான கணக்காய்வாளர் அறிக்கை

மேற்குறிப்பிட்ட அறிக்கை சம்பந்தமாக தற்போது நிறுவகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கின்றேன்.

1.2 **நிதி அறிக்கை சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

1.4 **நிதி அறிக்கை**

2. **நிதி அறிக்கை**

2.1 **நிலையைக் கணக்கிட்ட கருத்து**

2.2 <u>நிதி அறிக்கை சம்பந்தமான கருத்து முன்வைத்தல்</u>

2.2.1 **இலங்கை கணக்கியல் நியமங்கள்**

(அ) ஒரு வருட நிரந்தர சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த பணியாளர் சபைக்காக ஊழியர் சேமலாப நிதியை கணக்கிட்டுள்ளதோடு அதற்கமைய நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஆ) இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக வெளிவாரி பாடநெறிகளிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அனைத்தும் கணக்கிலிடப்படும்.

2.2.2 **கணக்கியல் குறைபாடுகள்**

(அ) ஜேர்னல் இல.110∴2012 மூலம் திருத்தப்பட்டுள்ளது.

(ஆ) மூன்று போதனாசிரியர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கிடைத்திருந்த நிதியில் ஆராய்ச்சிகள் இரண்டின் நிதி தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. ஏனைய ஆராய்ச்சிகள் தற்போது நடைபெருகின்றன.

(இ)ஜேர்னல் இல.111∴2012 மூலம் திருத்தப்பட்டுள்ளது. கிடைக்கவேண்டிய நிதி சம்பந்தமாக மீண்டும் உரிய திணைக்களங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(ஈ) நிலையான சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் தேய்மான ஒதுக்கீடு

(1) ஜேர்னல் இல.112∴2012 மூலம் திருத்தப்பட்டுள்ளது.

(11) ஜேர்னல் இல.113∴2012 மூலம் திருத்தப்பட்டுள்ளது.

(111) திருத்தப்பட்டுள்ளது.

2.3 **தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்கள்**

கொள்வனவு செய்த உபகரணங்கள் சம்பந்தமாக உப ஆவனங்களில் இருந்த 22,581 ரூபா வித்தியாசத்தை அடையாளம் கண்ட பின் திருத்தப்பட்டுள்ளது.

2.4 <u>சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ முடிவுகளுக்கு அமைவாக இருக்காமை.</u>

(அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி

(1) நி.ஒ.வி:104(2)

சேதங்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(2 நி.ஒ.வி:165

தீர்க்கப்படாது எஞ்சியுள்ள நிதி சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(3) நி.ஒ.வி:371

முற்கொடுப்பனவு நிதியை உரிய காலப்பகுதிகளில் ஈடு செய்ய அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுக்கப்படும். தவிர்கமுடியாத காரணங்களால் சில முற்கொடுப்பனவு நிதிகளை ஈடு செய்ய தாமதமாகும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

(ஆ) இல:யுலுநு∴வுயுஓ∴01∴2011 மற்றும் 2011 ஏப்ரல் 18ஆம் திகதி உரிய தேசிய வருமான வரி திணைக்களத்தின் சுற்று நிருபம்.

1.உரிய நேரத்திற்கு காசோலைகள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

3. **நிதி மீளாய்வு**

3.<u>1</u> **நிதி பெறுபேறு**

4 **நடவடிக்கை மீளாய்வு**

4.1 **கற்கை செயலாற்றுகை**

பாடநெறி அலகு முறையை அறிமுகம் செய்வதனூடாக இந்த நிலை குறையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

4.2 **முகாமைத்துவ வினைத்திறனின்மை**

(அ) நிலையான சொத்துகள் பட்டியலை தயாரிக்கும்போது ஏற்பட்ட தவறை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மீளாய்வுக்குள்ளான வருடத்தின் பொருளாய்வுக்கமைய பாவனைக்கு எடுக்க முடியாத பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.3 **நடவடிக்கை வினைத்திறனின்மை**

நிலையான சொத்துகள் பட்டியலில் 2009-12-31ன் பின் கொள்வனவுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

4.4 **தாமதமான திட்டங்கள்**

பட்டப்பாட படிப்பு வேலைத்திட்டங்களின் அபிவிருத்திக்காக கிடைத்த நிதி ஒதுக்கீடுகள் உரிய வேலைகளுக்காக தற்போது செலவு செய்யப்பட்டுள்ளன.

4.5 **பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்**

நிறுவகத்தின் உள்ளக தொலைபேசி தொகுதியின் தவறு சம்பந்தமாக டெலிகொம் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதோடு அதனால் நிறுவகத்திற்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை தவிர்ப்பதற்கு ீயுடீஓ தொகுதியொன்றை இலவசமாகப் பெற்றுத்தர இணங்கியுள்ளனர். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

4.6 **குறைந்த நிதி பயன்பாடு**

நடைமுறைக் கணக்கில் உள்ள மிகுதிப் பணத்தை உரிய நிதியை செலுத்தும் வரை குறுகிய கால முதலீடு செய்யப்பட்டுள்ளது.

5. **கணக்கியல் நிலை மற்றும் நல்லாட்சி**

5.1 **வரவு செலவுடன் கூடிய நல்லாட்சி**

வரவு செலவு அறிக்கையை முகாமைத்துவ நிர்வாகக் காரணியாகக்கொண்டு உபயோகிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.

6. **தொகுதி மற்றும் நிர்வாகம்**

குறிப்பிட்ட துறைகளில் உள்ள குறைபாடுகளை குறைத்துக்கொள்வதற்கு விசேட கவனம் செலுத்திச் செயற்பட இணங்குகிறேன்.

பணிப்பாளர்

பேராசிரியர் ஜனித்தா ஏ.லியனகே

பிரதிகள்	1. துணைவேந்தர்	- களனிப் பல்கலைக்கழகம்
	2. தலைவர்	- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
	3. செயலாளர்	- உயர் கல்வி அமைச்சு
	4. செயலாளர்	- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு